# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2029 தை 3 வெள்ளிக்கிழமை (16-01-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 45


## வவுனியா நகரப் பகுதி நேற்று சுற்றிவளைப்பு

### பலர் விசாரணைக்கு உள்ளாகினர்

வவுனியா, ஜனவரி 16

வவுனியா நகரப்பகுதி நேற்றுக்காலை திடீரென இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு, சுமார் ஆயிரம் பேர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

வவுனியா நகரப் பகுதியில் பம்பைமடுக்குளத்தின் ஒரு பகுதி, கூசைப்பிள்ளையார் குளம், முதலாம், இரண்டாம் குறுக்குத்தெருக்கள், தமிழ் மத்திய மகாவித்தியாலய அகதி முகாம் உட்பட்ட பகுதிகள் நேற்று அதிகாலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டன.

அங்குள்ளவர்கள் சுமார் ஆயிரம் பேர் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு வைத்து அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்டு, பின்னர் வீடியோபடம் பிடிக்கப்பட்டு மாலை 3.00 மணியளவில் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அகதிமுகாமில் தங்கியிருந்த அகதிகள் துருவித்துருவி விசாரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப்பகுதியில் உள்ளவர்கள் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட, அங்குள்ள வீடுகளில் தேடுதல் இடம்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணியின் மனு மீது தீர்ப்பு இன்று

கொழும்பு, ஜன. 16

யாழ்ப்பாணம் மாநகர சபை, வலிகாமம் வடக்கு பிரதேச சபை ஆகியவற்றுக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான தீர்ப்பு இன்று வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வழக்கு நேற்று மேன்முறையீட்டு நீதி மன்ற நீதியரசர்கள் ஹெக்டர் எஸ். யர்ப்பா, என். டி. விஜயன் ஜயசூரிய ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் ஆர். கே. டபிள்யூ. ராஜா குணசேகரா, ஐயம்பதி விக்கிரமரத்ன ஆகியோர் தமது வாதங்களை முன் வைத்து வாதிட்டனர்.

அதன் பின்னர் வழக்கின் பிரதிவாதிகளான புளொட் அமைப்பின்சார்பில் ஆஜரான சட்டத்தரணி பாயிஸ் முஸ்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நூலகத் திறப்புவிழாவை ஒட்டி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது

### சிலர் பங்குபற்றாது திரும்பும் நிலை ஏற்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ். வீடமைப்புச் செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள இடைக்கால யாழ் பொதுசன நூலகத்தைத் தொலைத்தொடர்பு, தொடர்பு சாதனத் துறை அமைச்சர் மங்கள சமரவீர நேற்றுமுன்தினம் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார்.

இந்த வைபவத்தை ஒட்டி அப்பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டிருந்தது.

இந்தப் பாதுகாப்புக்காரணமாக வைபவத்துக்கு வந்த பலர் வைபவத்தில் கலந்து கொள்ளாது திரும்பிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஈ. பி. டி. பி. செயலளார் நாயகம் டக்ளஸ்தேவானந்தா, புளொட் அமைப்பின் உப தலைவர் என். மாணிக்கதாசன் ஆகியோரும் இப்படியானவர்களில் அடங்குவர்.

பின்னர் இராணுவத்தினர் டக்ளஸின் அலுவலகத்துக்கு சென்று அவரை கூட்டத்துக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

### தனியார் பஸ்ஸில் குண்டு தயாரிக்கும் பொட்டாசியம்

கொழும்பு, ஜன. 16

கொழும்பிலிருந்து காலி நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றில் இருந்து வெடிகுண்டு தயாரிப்பதற்கேற்ற 30 கிலோகிராம் பொட்டாசியம் அடங்

(10ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவில் பொலீஸார் சூட்டுக்குப் பலி

வவுனியா, ஜன. 16

மன்னார் – வவுனியா வீதியில் நெளுக்குளம் பகுதியில் நேற்று இரவு 7-45 மணியளவில் பொலீஸார் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பிஸ்டல் குழுவின் வேலை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தையில் ஆளில்லாத வீடுகளில் திருடியதாக 5 பொலீஸார் கைது!

கொழும்பு, ஜன. 16

இராணுவ நடவடிக்கை காரணமாக ஓமந்தையில் இடம் பெயர்ந்த தமிழரின் வீடுகளில் இருந்து பொருள்களைக் களவாடியதாக சப் இன்ஸ்பெக்டர் உட்பட ஐந்து பொலீஸாரும் பொலீஸ் வாகனத்தின் சாரதி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாகனம் ஒன்றில் இவர்கள் இப்பொருள்களை எடுத்துச்சென்ற சமயம் அநுராதபுரம் 2 ஆம் கட்டைச் சந்தியில் உள்ள வீதிச் சோதனைச்சாவடியில் வைத்து கைதாகினர்.

கைதான பொலீஸார் அனைவரும் ஓமந்தை காவல் நிலையத்தில் பணிபுரிபவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொலீஸ் வாகனத்திலிருந்து கைப்பற்றப்பட்ட பொருள்களின் முட்கம்பி, மரப்பொருள்கள், மின்விசிறிகள், சைக்கிள்கள் ஆகியன அடங்கும்.

இப்பொருள்களை ஏற்றிய பொலீஸ் வாகனம் வவுனியாவிலிருந்து குருநாகலுக்கு புறப்பட்டதும், வவுனியாவிலிருந்து ஓர் பொலீஸ் அதிகாரி அநுராதபுரம் உயர் பொலீஸ் அதிகாரிக்கு வழங்கிய தகவலை அடுத்தே இவர்கள் கைதானதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-10)

### பாணந்துறை பஸ்ஸில் வெடிபொருள்:

## ரகசியப் பொலீஸார் தமிழ்நாடு செல்வர்

கொழும்பு, ஜன. 16

பாணந்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போக்குவரத்துச் சபை பஸ்ஸில் ஆயுதங்கள், வெடி மருந்துகள் மற்றும் செலுலர் தொலைபேசி ஆகியவை கண்டெடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக ரகசியப் பொலீஸ் குழு ஒன்று தமிழ்நாடு செல்ல உள்ளது.

செலுலர் தொலைபேசி மூலம் தமிழ் நாட்டிலுள்ள விடுதலைப் புலிகளின் பணிமனையுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது என விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாகப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

தமிழ்நாடு செல்லும் ரகசியப் பொலீஸ் குழு தமிழ்நாடு பொலீஸாரின் ஒத்துழைப்புடன் விசாரணைகளை மேற்கொள்வர்.

சுமார் 3 மாதங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட இந்த செலுலர் தொலைபேசி மூலம் ஒரேயொரு தொலைபேசி அழைப்பு மாத்திரமே பெறப்பட்டுள்ளதாம்.

(இ-10)

## புலோலியை சேர்ந்தவர் கைது

கொழும்பு, ஜன. 16

கொழும்பிலிருந்து பாணந்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்ஸில் கண்டெடுக்கப்பட்ட ஆயுதங்கள் வெடிமருந்துகள், செலுலர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் ரகசியப் பொலீஸார் பாணந்துறை பஸ் டிப்போ தேநீர்ச்சாலையில் பணியாற்றும் தமிழ் ஊழியர் ஒருவரைச் கைது செய்துள்ளனர்.

இப்பொருள்கள் பஸ்ஸில் கண்டெடுக்கப்பட்ட கடந்த 9 ஆம் திகதியன்று இந்த ஊழியரின் செயற்பாடுகள் சந்தேகத்திற்கு இடமாயிருந்த காரணத்தாலேயே இவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரியவருகிறது.

பருத்தித்துறை, புலோலியைச் சேர்ந்த இந்த உழியர் சில காலம் பாணந்துறை பொலீஸ் நிலையத்தில் சிற்றூழியராகப் பணியாற்றினார் எனவும் அந்த வேலையைக் கைவிட்டு தற்போது பஸ் டிப்போ தேநீர்ச்சாலையில் பணியாற்றிவருகிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-10)

## வெட்டுப்புள்ளி வெளியானது

கொழும்பு, ஜன. 16

பல்கலைக்கழகங்களுக்கு 97 - 98 கல்வியாண்டுக்கு அனுமதி பெறும் மாணவர்களுக்கான வெட்டுப்புள்ளி விவரம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் நேற்று வெளியிடப்பட்டது.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களுக்கும், வளாகங்களுக்கும் மாணவர்களை அனுமதிப்பதற்கான வெட்டுப் புள்ளிகளும் வெளியிடப்பட்டுள்ளன.

கணிதத்துறைக்கான வெட்டுப்புள்ளிகள் முன்னரே வெளிவந்த போதும், சகல துறைகளுக்கும் நேற்று வெட்டுப்புள்ளி விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

(வெட்டுப்புள்ளி விவரம் 9 ஆம் பக்கத்தில்) (இ-3)

## பாஷையூர், கொக்குவில் பகுதிகள் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 16

நேற்று பாஷையூர் பகுதியிலும் ஆனைக்கோட்டை உயரப்புலம், குளப்பிட்டி, கொக்குவில் பகுதிகளிலும் படையினர் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர்.

பாஷையூரில் நேற்றுக் காலை 6-00 மணியிலிருந்து படையினரின் தேடுதலும் சுற்றி வளைப்பும் இடம் பெற்றன.

உயரப்புலம் கொக்குவில் பகுதியில் இடம் பெற்ற சுற்றிவளைப்பின் போது பொதுமக்கள் ஆனைக்கோட்டை பிடாரி அம்மன் கோயிலுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

(இ-17-51-135)

## ஐ.தே.க. யோசனை தந்தால் தெரிவுக்குழு மீண்டும் கூடும்

### அமைச்சர் பீரிஸ் நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 16

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஐ. தே. க. மாற்று யோசனை எதுவும் தெரிவித்தால் அந்த யோசனை பற்றி ஆராய நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை மீண்டும் கூட்டுவது குறித்து முடிவு எடுக்கப்படும்.

அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான யோசனைகளை மேலும் தாமதப்படுத்துவதில் பயன் எதுவும் இல்லை.

சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக மாற்று யோசனைகளை முன் வைப்பதற்கு ஐ. தே. கட்சி மேலும் கால அவகாசத்தைக் கோரியுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு 77 தடவைகள் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது. ஐ.தே.கட்சி தனது நிலைப்பாடுகளைத் தெரி

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கோவிந்தர் நாகலிங்கம்

கோவிந்தர் நாகலிங்கம் 13-01-98 அன்று காலமானார். அன்னாரின் ஈமக்கிரியை 13-01-98 அன்று மாலை நான்கு மணிக்கு மறவன்புலோவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றறது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
பிள்ளைகள்.

மறவன்புலோ,
சாவகச்சேரி. (52659)

## க. அ. சின்னையா

க. அ. சின்னையா (க. அ. சின்னையா சன்ஸ் ஸ்தாபகர்) அவர்கள் 15-01 98 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் அடக்க ஆராதனை பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
அ. சி. ஜெயரத்தினம்

கொத்துக்கட்டி வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய். (52655)

## திருமதி சின்னையா தங்கம்மா

சரவணையை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது மந்துவில் மேற்கில் வசித்தவருமாகிய சி. தங்கம்மா 15-1-98 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும், சின்னையா—துரைராசசிங்கம் (வவுனியா, பண்டாரிக்குளம்), சிவராசா (சரவணை, மேற்கு), அருளானந்தசிவம் (வர்த்தகர், மந்துவில் மேற்கு, சாவகச்சேரி), சரஸ்வதி (வன்னி), மகாதேவி (வன்னி), புஸ்பராணி (வன்னி) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மந்துவில் இலுவன் மயானத்தில் 16-1-1998 இன்று நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
சி. அருளானந்தசிவம்

மந்துவில் மேற்கு,
கொடிகாமம். (சி/2657)

## சிவசுப்பிரமணியம் சோதிமலர் (சுசி)

உடுப்பிட்டியைச் சேர்ந்த சோதிமலர் (சுசி) 9-1-98 அன்று வவுனியாவில் அகாலமரணமானார்.

அன்னார் சிவசுப்பிரமணியம் (ஆச்சாரி)—பத்மாவதி தம்பதிகளின் அன்பு மகளும், விமலநாதன் (டோகா), சுரேஸ்குமார், ரமேஸ், ஜீவமலர், தயானந்தன், கோணேஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வராஜா—கனகம்மா தம்பதிகளின் பெறாமகளும், கணபதிப்பிள்ளை—பரமேஸ்வரி தம்பதிகளின் மருமகளும், நகுலேஸ்வரி, கமலேஸ்வரி, புஸ்பராணி, சற்குணராசா, கனகராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 16-1-98 வவுனியாவில் நடைபெறும்.

தகவல்:
S தயானந்தன்
(சகோதரன்)

இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி. (52632)

## இரத்தினசாமி பஞ்சாட்சரஐயர்

கோண்டாவில் கிழக்கு ஆமிமட அரசடி விநாயகர் முன்னாள் பிரதம பூசகர் இரத்தினசாமி பஞ்சாட்சரம் ஐயர் அவர்கள் 14-01-98 பிற்பகல் 7 மணிக்கு சிவபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15-01-98 பிற்பகலில் கோண்டாவில் இந்துமயானத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

தயவுசெய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ப. பாசாங்குசன்
(மகன்)

(52662)

## காசிநாதன் தேவராஜா

சங்குவேலியைப் பிறப்பிடமாக கொண்டவரும் பிரான்ஸில் வசித்தவருமான காசிநாதன் தேவராஜா 13 - 01 - 1998 அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் சங்குவேலியைச் சேர்ந்த திரு. காசிநாதன், திருமதி காசிநாதன் ஆகியோரின் அன்புப் புதல்வனும், உஷாவின் ஆருயிர்க் கணவரும், கட்டுடையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி சண்முகதாசவின் அருமை மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ச. சிவகுமாரன்
(கிராம அலுவலர்)

கட்டுடை,
மானிப்பாய். (52635)

# சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, ஜன.16

கொழும்புத்துறை ஆத்தியம்பதி அருள்மிகு ஸ்ரீசந்திரசேகரர் விநாயகர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு சதுர்த்தித் திருவிழா நடைபெறும். [ஐ-30]

## ரெலோவின் பிரசாரக்கூட்டம்

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 00 மணி முதல் 6 30 மணி வரை நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலடியில் நடைபெறும் என்று ரெலோ முதல்வர் எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

## மலேரியாவுக்கு 15 நாள்களில் 14 பேர் பலி!

மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் கடந்த 15 தினங்களில் மட்டும் 14 பேர் மரணம் அடைந்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

யாழ். போதனா வைத்தியசாலையில் மட்டும் தினமும் 40 முதல் 50 பேர் வரை மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றனர். 1, 2, 3, 7, 9, 10 ஆகிய வார்ட்டுக்களில் நூற்றுக்கணக்கான மலேரியா நோயாளிகள் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த காலங்களை விட இவ் வருடமே யாழ். குடாநாட்டில் மலேரியாவின் தாக்கம் அதிகம் என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## தபால்கள் விநியோகம்

வெளிநாட்டுத் தபால்கள் அடங்கிய 49 பொதிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

அவை அனைத்தும் நேற்று தரம் பிரிக்கப்பட்டு இன்று முதல் விநியோகிக்கப்படவுள்ளன.

அதேசமயம் இங்கிருந்து 24 தபால் பொதிகள் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. (இ-8)


## நாவலர் கலாஷேத்திரம்

நாவலர் வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

கீழைத்தேய,
மேலைத்தேய
இசை வகுப்புகள்

ஆரம்பம்:
18 - 01 - 98
ஞாயிறு காலை 10 மணி
(52663)

## லிபேட்டி சினிமா

அச்சுவேலி.
30 அடி அகலத் திரையில்
விஜய்,
குமாரி சாலினி
நடித்த
காதலுக்கு
மரியாதை
(புதிய வெளியீடு)
காட்சிகள்:
9-30, 12-30, 3-30,
(52288)

## யா/புனித மரியாள் வித்தியாலயம் (O. L. R)

## மாபெரும் நாடக விழா ஒத்திவைப்பு

மேற்படி நாடகவிழா தவிர்க்கமுடியாத காரணங்களினால் பின்வரும் திகதிகளில் ஒத்திவைக்கப்பட்டுள்ள தென்பதைவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நாடகவிழாவில்

1) சத்திய வேள்வி (இசை நாடகம்)
1) ஏமாந்தான் ஏரோதன் (நாட்டுக் கூத்து)
3) தர்மம் காக்க (மகாபாரதத்தின் பிற்பகுதி)

போன்ற நாடக நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

16 - 01 - 98 இன் நிகழ்ச்சிகள்
18 - 01 - 98 காலை 10. 00 மணிக்கும்
17 - 01 - 98 இன் நிகழ்ச்சிகள்
19 - 01 - 98 பிற்பகல் 1. 00 மணிக்கும்

நடைபெறும் என்பதனையும் அறியத்தருகிறோம்.

மாணவர் நலன்புரிச் சங்கம்
(52658)

## புலமைப் பரிசில் - 1998


10ஆவது பயிற்சிப் பரீட்சை (யாழ்.மாவட்டம்)
அதிகூடிய புள்ளி பெற்றோர்:

1. செல்வன் தளையசிங்கம் அஜந்தன் — 180 புள்ளி
(யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)
2. செல்வன் கனகசபாபதி ஜெனகன் — 179 புள்ளி
(யாழ். ந. தெ. விக்னேஸ்வரா வி)
3. செல்வன் பா. அகிலநாத் — 172 புள்ளி
(உரும்பிராய்)
4. செல்வன் திருநாவுக்கரசு பிரசாந் — 171 புள்ளி
(யாழ் இந்து ஆரம்ப பாடசாலை)
5 செல்வி மகேந்திரன் சுவெனியா — 168 புள்ளி
(யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)

பரிசு பெறும சுட்டெண்கள்:
31, 236, 10. 78

அடுத்த பரீட்சை 18-01 1998 ஞாயிறு
விவரங்களுக்கு:-
BOND - யாழ். நகர்
(52658)


# முதல் ஆண்டு நினைவலைகள்



## சீவரட்ணம் உதயகுமார்

(கலட்டிக் கண்ணன்)

தோற்றம்: 31 - 08 - 1964 மறைவு: 16 - 01 - 1997

பாசத்தின் உறைவிடமே பண்பு நிறை பேருருவே!
மாசற்ற மனமுடையாய் மறைந்ததேன் மாமணியே?
நீர் இல்லா உலகினிலே நிம்மதி இல்லை கண்ணா!
சிரித்த நின்முகம் நித்தமும் காண்கின்றோம்
எம் வாழ்விடத்தில் உம் திருமுகம் நித்தமும்
ஜொலிக்குதையா.

உமது பிரிவால் துயருறும்:
சின்னையா குடும்பம்.

க. வைரமுத்து,
46, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம். (49909)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் பனிப்புயலினால் தெஹ்ரானில்
# 22 பேர் பலி! 40 பேர் காயம்!!

தெஹ்ரான், ஜன. 16

ஈரானில் கடந்த செவ்வாய் யன்று நள்ளிரவு வீசிய பலத்த பனிப் புயலினால் சுமார் 22 பேர் பலியாகினர்; 40 பேர் வரை காயமடைந்தனர்.

தெஹ்ரானையும், கஸ்பியன் கடலையும் இணைக்கும் சுரங்கப்பாதையின் மேற்பகுதி பலத்த பனிப் பொழிவின் காரணமாகத் திடீரென இடிந்து வீழ்ந்தது என்றும் — அச்சமயம் இரண்டு வாகனங்கள் அதற்குள் சிக்குண்டதாகவும் முற்கொண்டு

## உலக அரங்கில்

இடைத்த செய்திகள் தெரிவித்தன.

ஈரானில் கடந்த 10 ஆண்டுகளில் மிக மோசமான பனிப் பொழிவு ஏற்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான மக்கள் இந்தப் பனிப் பொழிவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## சுப்புலட்சுமிக்கு பாரத ரத்னா விருது!

புதுடில்லி, ஜன. 16

இந்தியாவின் அதி உயர் விருதான 'பாரத ரத்னா' விருது இவ்வாண்டு பிரபல கர்நாடக பாடகி எம். எஸ் சுப்புலட்சுமிக்கு வழங்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

81 வயதான சுப்புலட்சுமி தனது 13 ஆவது வயது முதல் கர்நாடக இசை உலகில் பிரவேசித்து உலகப் புகழ் பெற்ற கலைஞராகத் திகழ்கிறார்.

இந்திமொழி பேசத் தெரியாத அவர் இந்தியில் பாடிய 'மீரா பஜன்' அவருக்குப் பெரும் புகழையும், விருதுகளையும் குவித்தது.

1966 ஆம் ஆண்டு ஐ. நா. பொதுச் சபையில் கர்நாடக இசை பரப்பி உலகத் தலைவர்களிடையேயும் அவர் பிரபல்யம் பெற்றார்.

அவரது கணவரான சதாசிவம் தமது 96 ஆவது வயதில் கடந்த நவம்பரில் காலமானார்.

சுப்புலட்சுமி தனக்குக் கிடைத்த லட்சக்கணக்கான பணத்தை தர்மப் பணிகளுக்கு வழங்கி விட்டு மிக எளிமையாக வாடகை வீட்டில் வாழ்ந்து வருகிறார்.

அவருக்கு பாரத ரத்னா விருது கிடைத்ததையிட்டு தமிழக தலைவர்கள் பலர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

[ஐ]


## 71 ஆவது பிறந்த நாளையும் மறந்து வாழோம்



### மேரி ஹெலன் குணசிங்கம்

(இளைப்பாறிய உப அதிபர், யா/கன்னியர்மடம் ம. வி.)

பெற்றெடுத்த பேரன்பே தாயே நீங்கள்
பிறந்த நாள் இன்றைக்கு ஆண்டு தோறும்
சுற்றி நாங்கள் இருந்தும்மை அணைத்துக் கொஞ்சிச்
சுகித்த சுகம் நெஞ்சினிலே இனிக்குதம்மா!
பற்றி வே இறைவனிடம் பறந்து சென்றே
பரகதியில் வீற்றிருக்கும் நிறைவை எண்ணி
உற்றதுயர் தாங்கி இங்கே வாழுகின்றோம்
உயர் வானில் அன்பு முகம் காணுகின்றோம்!

அன்புக் கணவன்,
ஆருயிர் மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

66, 6 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (52583)


## பபிள்கம் கண்டுபிடித்தவர் காலமானார்

வாஷிங்டன், ஜன. 16

'பபிள்கம்' என்று அழைக்கப்படும் சுவையான பொருளைக் கண்டுபிடித்து அறிமுகப்படுத்தியவரான அமெரிக்காவைச் சேர்ந்த வோல்ரர் டீமெர் (Walter Diemer] தமது 93 ஆவது வயதில் காலமானார் என்று அறிவிக்கப்படுகிறது.

பிலடெல்பியாவில் சுவிங்கம் தயாரிப்பு நிறுவனம் ஒன்றில் இவர் பணி புரிந்த சமயம் 'பபிள்கம்' தின்பண்டத்தை தமது 23 ஆவது வயதில் கண்டு பிடித்தார். [ஐ]

## புலனாய்வு உறுப்பினர் சுட்டுக் கொலை

கொழும்பு, ஜன. 16

திருகோணமலை மூதூர் தங்கநகரில் இராணுவ புலனாய்வு பிரிவைச்சேர்ந்த நபர் ஒருவர் நேற்று முன் தினம் காலை விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப் பட்டார்.

மூதூர் இராணுவ முகாமில் கடமையாற்றும் இவர் மீது விடுதலைப்புலிகளின் பிஸ்டல் குழு உறுப்பினர் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-21)

## குருநகர் படகுத்துறை வேலைகள் பூர்த்தி

யாழ்ப்பாணம். ஜன. 16

அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்தின் உதவியுடன் குருநகரில் அமைக்கப்பட்டு வந்த ஏலமேடை, படகுத்துறை என்பவற்றின் அமைப்பு வேலைகள் பூர்த்தியாகியுள்ளன.

அதேசமயம் காக்கைதீவில் அமைக்கப்பட்டு வந்த மீனவர் இளைப்பாற்றுமடம், கிணறு, மலசலகூடம் என்பனவும் மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளன. இவற்றை நிர்மாணிக்க 3 லட்சத்து 66 ஆயிரம்ரூபா செலவாகியுள்ளது. (இ-?)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 16 — 05 — 1992

உதிர்வு: 18 — 12 — 1997

### செல்வன் சிவகுமார் தினேஸ்

(முதலாம் ஆண்டு மாணவன், நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை)

நினைத்து நினைத்து எங்கே நீ எங்கே நீ
என்று நித்தம் கேட்டு இறைவனிடம்
கையேந்தி நிற்கிறோமடா!
உன் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உன்பிரிவால் துயருறும்,
அப்பா, அம்மா, அக்கா, தங்கை,
உற்றார், உறவினர்.

டச்சுவீதி, மானிப்பாய். (52577)



## 31 ஆவது நிறைவு நாள் நினைவுகள்



உதித்தது: 1932 — 04 — 17

உதிர்ந்தது: 1997 — 12 — 16

### அமரர் ஆறுமுகம் இராமநாதன்

மனைவி மக்கள் சுற்றமெல்லாம் மனம்கதற
வைத்திட்டீர்கள்
எதைவிரும்பி எமைவிடுத்துப் போய்விட்டீர்கள்
இவ்வுலகில்
கதைமுடிந்து போச்சுஇனி என்னஎன்றா
சென்றிட்டீர்கள்
பதைபதைத்து வாடுகிறோம் பாதையொன்று
கூறிடுங்கள்
அன்பேசிவம் என்றுநல்ல அர்த்தமாகச்
சொல்லிட்டீர்கள்
வன்பேஅற்ற நல்லதொரு வளர்ப்புஎன்று
வாழ்ந்திட்டீர்கள்
தென்பே ஊட்டி எமக்குச்சுவை தேனாகவே
இருந்திட்டீர்கள்
கண்ணேஇங்கு கலங்குறோங்கள் கதறிடவா
போய்விட்டீர்கள்
காரைநகர் உங்கள் ஊரில். களபூமி தன்னையிலே
பாரைக்காக்கும் பிள்ளையாரை நிதம்விரும்பி
வழிபட்டீர்கள்
தெர்ப்பைபோட்டு கும்பஅபிஷேகம் அதைச்
செய்திட்டீர்கள்
அன்பைக்காட்டிப் பிள்ளையாரின் நல்லருளைப்
பெற்றிட்டீர்கள்
ஒருகிழமை கழியுமுன்னே பிள்ளையாரில்
இணைந்திட்டீர்கள்
வருங்கிழமை நாட்களெல்லாம் எம்மைஅழ
வைத்திட்டீர்கள்
உங்களைநாம் மறந்திடத்தான் முடிந்திடுமா
முடிந்திடாது
இத்தரைநாம் வாழும்வரை எமதுகண்ணீர்
ஒய்ந்திடாது!

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்,
மைத்துனர்கள், மைத்துனிகள்.

தன்னை, களபூமி,
காரைநகர். (52603)



உள்ளத்தாலும் உணர்வாலும் - உண்மையுடனும் உறுதியுடனும்
உங்களுடன் உங்களுக்காகவே

## ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்)



X

விளம்பரம். (67656)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சிப் பகுதியில் சமூக நலன் வாரம்

போசாக்கின்மை, போதிய மருத்துவசதியின்மை ஆகியவற்றால் இன்னல்படும் கிளிநொச்சி ஜெயபுரம் கோயில் குடியிருப்புப் பகுதி மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த சமூகநலன் வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 6 ஆம் திகதி முதல் அனுஷ்டிக்கப்பட்ட இந்த வாரத்தில் இரத்தப்பரிசோதனை மேற்கொள்ளப் பட்டதுடன் பல்வேறு ஆலோசனைகளும் அங்குள்ள மக்களுக்கு வழங்கப்பட்டன.

பூநகரி உதவி அரசாங்க அதிபர், கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆகியோரின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்த சமூகநல வாரத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம், பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம் ஆகியவற்றின் தொண்டர்களும் கலந்து கொண்டனர்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட இரத்தப்பரிசோதனையில் 986 பேர் மலேரியாவால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

அவர்களுக்கு மலேரியா தடுப்பு மருந்து வகைகளும் வழங்கப்பட்டன. (இ-3)

## பரிசளிப்பு விழா

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று வெள்ளி பிற்பகல் 2 மணிக்கு அதிபர் ஆ. சி. நடராசா தலைமையில் உரும்பிராய் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ)

## பொங்கல் விழா

கொழும்புத்துறை, ஜன. 16

கொழும்புத்துறை குருந்து வக்கல்லூரியில் இயங்கும் தனிநாயகம் தமிழ் மன்றத்தின் நேற்று முன்தினம் தைப் பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது.

இவ் விழா பண்பாட்டு திருப்பலியுடன் ஆரம்பமாகி கலை நிகழ்வுகளோடு முடிவடைந்தது. (ஐ-30)

## லயன்ஸ் ஸ்தாபகர் நினைவு தினம்

திருநெல்வேலி, ஜன. 16

யாழ். லயன்ஸ் கழகம் லயன்ஸ் கழக ஸ்தாபகர் மெல்வின் ஜோன்ஸ் நினைவு தினத்தை முன்னிட்டு நாளை சனிக்கிழமை வதிரி ஸ்ரீ. பரமானந்தா ஆச்சிரமத்தில் சிரமதானம், விளையாட்டுப் போட்டி என்பனவற்றை நடத்தவுள்ளனர்.

சமையற் பாத்திரங்கள் அன்பளிப்புச் செய்தல், மதிய போசனம் வழங்குதல் ஆகிய பணிகளும் இடம் பெறவுள்ளன.

யாழ். வட்ட லியோகழகம், யாழ். இந்து மகளிர் கல்லூரி லியோகழகம் ஆகியனவும் இதில் பங்கு பற்றவுள்ளன.

(ஐ-135)

## கருத்தரங்கு

யாழ். விஞ்ஞான சங்கப் பகுதி B இனால் நடத்தப்படும் அறிவியல் அரங்குத் தொடரில் யாழ். பல்கலைக்கழக விவசாய பீட விரிவுரையாளர் திரு. பொன்னையா ஆழ்வார்பிள்ளை அவர்கள் வழங்கும் ''பன்முகமான செயலூக்கங்களின் மூலம் விவசாய இயந்திரவியலின் பிரயோகம் தொடர்பாக விவசாயிகளின் மாறும் எண்ணக்கரு'' பற்றிய கருத்தரங்கு ஒன்று இன்று 16-01-1998 பிற்பகல் மூன்று மணிக்கு யாழ். பல்கலைக்கழக பௌதிகதுறை மண்டபத்தில் நடைபெறும்.

ஆர்வம் உடையோர் அனைவரும் பங்கு கொள்ளலாம்.

செயலாளர்
யாழ் விஞ்ஞான சங்கப் பகுதி B
(52650)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 | 17 |
| 11 | 12 |
| 1932 | 1997 |

### திருமதி நல்லையா பரமேஸ்வரி

எமது தாயாரின் இறுதிக்கிரியையில் பங்கு பற்றியும், ஆறுதல் வழங்கியும் மற்றும் சகல வசதிகளையும் அன்புடன் நல்கிய அனைவருக்கும் நாம் நன்றி கூறுவதோடு இன்று 16 - 01 - 1998 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மகள் நவமணி,
பேர்த்தி பத்மா, சகோதரர்கள்,
மைத்துனர்கள், மருமக்கள்,
பெறாப்பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

சங்கானை கிழக்கு,
பிரான்பற்று,
பண்டத்தரிப்பு.

(52614)

## விக்னா கல்வி நிறுவனம்

அளவையியல்
திரு. சயந்தன்
98 பகுதி II
சனி, ஞாயிறு 2.30P m
99 குறியீட்டு
அளவையியல்
சனி, ஞாயிறு 8.00A.m.
ஆரம்பமாகி விட்டன.

(52649)

## வடமராட்சி லயன்ஸ் கழகம்

### அதிர்ஷ்டலாபச் சீட்டு குலுக்கள் முடிவுகள்

14 - 01 - 98 தினத்தன்று நடைபெற்ற சீட்டிழுப்பில் தெரிவான பரிசுகட்குரிய இலக்கங்கள் வருமாறு.

| | |
|---|---|
| முதற்பரிசு | 3904 |
| இரண்டாவது பரிசு | 1694 |
| மூன்றாவது பரிசு | 0289 |

ஆறுதல் பரிசுகட்குரிய இலக்கங்கள் வருமாறு:

| | | | | |
|---|---|---|---|---|
| 2528 | 4759 | 4348 | 4529 | 1709 |
| 0980 | 2607 | 1869 | 0872 | 0995 |

மந்திகையிலுள்ள எமது கழகச் செயலகத்தில் 17 - 01 - 98 சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறவுள்ள நிகழ்வில் பரிசுப் பொருள்களை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே வெற்றியீட்டிய இலக்கங்களுக்குரியவர்களை உரிய சீட்டுக்களுடன் மேற்படி நிகழ்வில் சமுகமளிக்குமாறு அன்புடன் அறியத்தருகின்றோம்.

ஆ. சிவசுவாமி
தலைவர்

(சி-2655)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் செல்வம் இரகுநாதன்

(திரவியம்)

மண்ணகழ:- 13-10-1958 கண் நெகிழ:- 15-12-1997

திதி: 16 - 01 - 1998.

அன்பின் சுடரொளியாய், ஆற்றலின் உறைவிடமாய் இல்லறத்தின் இலக்கணமாய் ஈதலின் இருப்பிடமாய் உத்தம நற்பண்பினராய், ஊரறிந்த உறவினராய் ஏற்ற மிகு எம் குடும்பம் பாசமுயர்கழகமாக்கி பிள்ளைகள் எம் கல்வி உயர் பண்புகளின் எல்லை காண கணம் கணமாய் எமக்காக காரியங்கள் பல செய்தும் முயற்சிகளின் பலன்காண முன்னமே எமை இங்கு தளர்ச்சியுற்று தரைமீது கதறி அழ வைத்து விட்டு உயர்ச்சி பெறச் சென்றதெங்கே அறியாது புலம்புகின்றோம்.

உயர்ச்சிபெற்று உம்ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள்,
தாய், சகோதரர்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

[52618]

## விவசாயிகளே இதோ! BASF

உருளைக்கிழங்கைத் தாக்கும் முற்கூற்று, பிற்கூற்று வெளிறலைக் கட்டுப்படுத்த அதிசிறந்தது

### பொலிராம் M

இது:—

வெங்காயம், மிளகாய், தக்காளி போன்ற பயிர்களைத் தாக்கும் பூஞ்சனத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த வல்லது.

மற்றும்

கத்தரியின் தண்டுத்துளைப்பான், வெங்காயத்தின் தாழ்கோதிப் புழுவைக் கட்டுப்படுத்த அதிசிறந்த கிருமிநாசனி

### டெஸிஸ்

FINCHEM AGRO DIVISION

பின்கெம் நிறுவனத்தினால் விநியோகிக்கப்படுகின்றது

அனைத்து விவசாய இரசாயன விற்பனையாளரிடமும் பெற்றுக் கொள்ளலாம்

**BASF Finlay (Pvt.) Ltd,**
186, Vauxhall Street, Colombo - 2.

(பீடை கொல்லிகள் அபாயகரமானவை அவதானமாகப் பாவிக்கவும்)

(கி/2648)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமானப்படை சிப்பாய் தற்கொலை

வவுனியா, ஜன. 16

வவுனியா விமானப்படை முகாமில் விமானப்படைச் சிப்பாய் ஒருவர் கடந்த திங்கள் இரவு தனக்குத்தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

(உ-21)

# புலிகள்தாக்குகிறார்கள்எனஎண்ணி படையினர் திருப்பித் தாக்கினார்கள்

## ஊர்காவற்றுறைச் சம்பவம் குறித்து சிப்பாய் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஜன. 16

துறைமுகப் பகுதியில் இருந்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. நாம் அங்கு சென்றபோது துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் இறுது ஓய்ந்திருந்தன. நாம் அருகில் சென்றதும் எம்மை நோக்கி மீண்டும் கடுமையாக சுடத் தொடங்கினார்கள். நாம் புலிகள் தாக்குகின்றார்கள் என எண்ணித் திருப்பித் தாக்க ஆரம்பித்தோம்.

கடந்த நவம்பர் 22 ஆம் திகதி ஊர்காவற்றுறைக் கடற்பரப்பில் கடற்படையினருக்கும் ஈ.பி.டி. பியினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்த ஆதம் பிள்ளை அஸ்லத்தின் மரண விசாரணையில் சாட்சியமளிக்கையில் கடற்படைச் சிப்பாயான பிரசாந்த சிந்தக கமகே என்பவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற அமர்வு நீதிமன்றில் இந்த மரண விசாரணை பதில் நீதிவான் க. கேசவன் முன்னிலையில் நடந்தது.

அவர் மேலும் சாட்சியமளிக்கையில்

நான் ஊர்காவற்றுறைப் பகுதியில் சம்பவதினம் கடமையில் இருந்தேன். ஈ.பி.டி. பியினர் அங்கு வந்து நெடுந்தீவுக்கு புலிகள் வந்துள்ளனர். நாம் அங்கு செல்லவேண்டும் எனக்கூறி படகைப் பெற்றுச் சென்றிருந்தனர். சுமார் 7 மணியளவில் துறைமுகப் பகுதியில் துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டதும் நாம் புலிகள் இங்கும் வந்து விட்டார்கள் என நினைத்தே அங்கு விரைந்து சென்றோம். நாம் அருகில் சென்றதும் எம்மை நோக்கி மேலும் அதிகளவில் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. எனவே தான் நாமும் திருப்பித்தாக்க வேண்டி வந்தது.

சற்று நேரத்தில் சண்டை ஓய்ந்தது. நாம் அங்கு சென்று பார்த்தபோது ஒருவர் காயமடைந்திருந்தார். ஒரு துப்பாக்கி, மோட்டார் சைக்கிள் என்பன அங்கு கிடந்தன.

பின்னர்தான் எம்மைத் தாக்கியது ஈ. பி. டி. பி. என அறிந்தோம். அவர்கள் எம்மைத் தாக்குவார்கள் என நான் நினைக்கவில்லை.

இப்படி அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே இரு கடற்படையினர் மரண விசாரணையில் சாட்சியம் அளித்திருந்தது தெரிந்ததே.

(இ-9)

## வாக்காளர் அட்டை விநியோகம்

கொழும்பு, ஜன. 16

யாழ். உள்ளூராட்சித்தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை விநியோகிக்கப்படும்.

வாக்காளர்கள் தமது அடையாளத்தை நிரூபித்த பின்னர் இவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேற்று அறிவித்தது.

(உ-3)

## தொலைக் கல்வி போதனாசிரியருக்கு

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ். இந்துக்கல்லூரி தொலைக்கல்வி நிலையத்தைச் சேர்ந்த சகல தொடர் கல்விப் பயிற்சி ஆசிரியர்களையும், போதனாசிரியர்களையும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நிலையத்தில் தம்மைச் சந்திக்குமாறு சிரேஷ்ட போதனாசிரியர் ச. சரவணமுத்து கேட்டுள்ளார்.

(ஐ-9)

# திக்கம் சாராய வடிசாலை மீண்டும் இயங்க ஆரம்பிக்கும்

## வரி செலுத்துவதிலிருந்து விலக்கு

திக்கம் சாராய வடிசாலையிடமிருந்து 1997- ஆம் ஆண்டு பெற்றுக்கொண்ட வரியை மீள ஒப்படைக்குமாறு யாழ். மதுவரித் திணைக்களத்துக்கு கொழும்பு தலைமையகம் உத்தரவிட்டுள்ளது.

திக்கம் சாராய வடிசாலைக்கு ஜனாதிபதியின் பணிப்பின்பேரில் 1998 ஆம் ஆண்டுக்கான வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

1997 ஆம் ஆண்டு இந்த வடிசாலைக்கான வரியின் ஒரு தொகை ஏற்கனவே செலுத்தப்பட்டிருந்த போதும் மீதி வரியையும் செலுத்தமாறு மதுவரித்திணைக்களம் அழுத்தம் கொடுத்ததுடன் வரி செலுத்தாமையால் அதன் உற்பத்தியையும்நிறுத்திவைத்திருந்தது.

உற்பத்தியை மீள ஆரம்பிக்கும் நோக்குடன் 97-ஆம் ஆண்டுக்கான மீதிவரியை வடிசாலை நிர்வாகம் செலுத்தியது. இது தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து 97ஆம் ஆண்டுவடிசாலையிடமிருந்து பெற்ற வரியை மீளவும் வடிசாலையிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. பூட்டப்பட்டிருக்கும் வடிசாலையை உடன்திறந்து உற்பத்தியை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(இ-5)

# துறை நீலாவணை மோதலில் புலி உறுப்பினர் மரணம்

மட்டக்களப்பு துறை நீலாவணையில் விசேட அதிரடிப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம் பெற்ற மோதலில் புலிகளின் உள்ளூர் தலைவர் கண்ணன் என்பவர் பலியானதாகப் பாதுகாப்புத்தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

கடந்த செவ்வாயன்று மாலை பெரிய நீலாவணையில் இவர் கைது செய்யப்பட்டார் என்றும்—அவர் கொடுத்த தகவல்களின் பிரகாரம் ஆயுதங்களை மீட்க அழைத்துச் செல்லப்பட்டார் என்றும்—

அந்நேரம் விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்து தாக்குதல் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இம் மோதலில் அவர் கொல்லப்பட்டார் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-21)

## ஆத்மஜோதி மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையினரின் ஆதரவில், ஆத்மஜோதி நா. முத்தையா ஞாபகார்த்த மலர் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் அருட்கவி சீ. விநாசித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் ஆரம்பத்தில் யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் நா. வி.மு. நவரத்தினத்தின் திருமுறைப் பாராயணமும், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரையும், யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் ப. கோபாலகிருஷ்ண ஐயரின் வாழ்த்துரையும் இடம்பெறும்.

இந்துசமயப் பேரவை உப தலைவர் ஆ மகாலிங்கம், பரமேஸ்வரா நம்பிக்கை நிதியத் தலைவர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை வழங்குவார்.

மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் நிகழ்த்துவார்.

(ஐ-8)

## நீங்கா நினைவுகளில் ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 29 – 02 – 1929

விண்ணில்: 23 – 01 – 1992

### திருமதி பரமேஸ்வரி இராசையா

(சமாதானநீதிவான் இ. இராசையாவின் பிரியமனைவி)

திதி: 16–01–1998

ஆறாண்டு அதிவிரைவில் அகன்றதே நீ பிரிந்து
நூறாண்டு பறந்தாலும் பறக்குமோ நின்பாசம்
சுகமான சொர்க்க வாழ்வை சுவைத்து நீ வாழவேண்டி
இதமாக இறைவனடி என்ஞான்றும் இறைஞ்சி
நிற்போம்!

மறவோம் உன்னை!

கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

'இந்திரப் பிரஸ்தம்'
221, கண்டி வீதி,
கச்சேரியடி, யாழ்ப்பாணம்

(52639)

## நெஞ்சக் கனவில் ஈராண்டு



அக இருள் நீக்கி ஞான ஒளி ஏற்றிய ஆசிரிய திலகம்

### அமரர் தம்பையா புண்ணியமூர்த்தி

மலர்வு: 1–4–1928

உதிர்வு: 7–2–1996

திதி: 16–01–1998

அன்பெனும் சாந்து பூசி
அறிவெனும் கற்கொண்டு
உறவெனும் கூடுகட்டி
ஊர் போற்ற வாழ்ந்த அப்பா!
அரனடி சேர்ந்தின்று
ஆண்டிரண் டானதப்பா!
உறையும் எம்உயிரின் உட்பொருளை
கரையும் எம் கண்ணீரில் காண்பீரோ?

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
நண்பர்கள்,

ஆச்சிரமம் வீதி,
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

(சி/2642)

கடந்த பொழுதுகள் இருண்ட பொழுதுகளாகின
வரும் பொழுதுகள் ஜனநாயகத்தின் தலைமைக்கே!

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) X

ஒ-0017]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

நாவலர் வீதியில் கால்நடை வைத்தியசாலைக்கும் கைலாசபிள்ளையார் கோயிலுக்கும் இடையில் 13-1-98 இல் மூக்குக் கண்ணாடி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஞா. குகநாதன், உதயன் பணிமனையில் ஒப்படைக்கவும். (52645)

மயில்வாகனம் லோகநாயகி ஆகிய எனது 487461644V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் யாழ். பஸ் நிலையத்துக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மிக்கைத்தொழில் நிறுவனம், 26/1, சிவன் புதியவீதி, திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். [52638]

### திருமண சேவை

66 ஆம் ஆண்டு சித்திரை நட்சத்திரமுடைய லண்டனில் இருந்து வந்து நிற்கும் மணமகனுக்கு தகுந்த பெண் ஜாதகம் உடையோர் தொடர்பு கொள்ளவும், பெண் London கூட்டிச் செல்லப்படுவார் தொடர்பு: தர்க்கா திருமண சேவை 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (52612)

### இலகு திருமண சேவை

மீண்டும இலகு திருமண சேவையை ஆரம்பித்துள்ளோம். வழமைபோல சனி தோறும் குறிப்புகள் ஞாயிறு காலைகளில் பெறப்படும். கனடா மணமக்களின் குறிப்புகள் சமர்ப்பித்தால் அங்குள்ள இவைமூலம் தொடர்பு கொண்டு திருமணங்களை நிறைவேற்ற முடியும். Sponser செய்யக்கூடிய கனடா குறிப்புகளும் உண்டு. தொடர்பு: துரைவிலா, யாழ். நாச்சிமார்கோயிலடி. [52448]

### விண்ணப்பப் படிவம்

சுகாதார சேவைத்திணைக்களத்தில் மாணவ குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பப் படிவம் விற்பனையாகின்றது. முடிவு திகதி 26-01-98 விவரங்கட்கு 10-01-98 வீரகேசரி பத்திரிகையைப் பார்க்கவும். நாயகபாலன், ஸ்ரோர்ஸ், மானிப்பாய்.. [49908]

### வினாத்தாள்

புலமைப் பரிசில் 10 ஆவது பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம். Bond, யாழ்ப்பாணம். (52555)

### விற்பனைக்கு

புதிய Video Mixer MX20 (New Model), Fuji A3 Size Laminator (புதியது) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:- இரு வீடியோ விஷன், கரணவாய் தெற்கு, கரவெட்டி. (52574)

## சீட்டிழுப்பு பிற்போடல்

யாழ். பல்கலைக்கழக வணிக மாணவ மன்றத்தால்

16 - 01 - 1998 இல் நடத்தப்பட இருந்த அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

சீட்டிழுப்புத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

வணிக மாணவர் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(52620)

## வடமாகாண அதிபர்கள் சங்கம்
## பொதுக்கூட்டம்

**இடம்: இந்துமகளிர் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**
**காலம்: 18-01-98 ஞாயிற்றுக்கிழமை**
காலை 10 மணி

புதிய செயற்குழுத் தெரிவும் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும் படி அன்புடன் அழைக்கின்றோம்.

தற்காலிக செயற்குழு சார்பில்

ஆ. சி. நடராஜா — தலைவர்
வே சிவராஜா — செயலாளர்

(52640)

சுழிபுரம் அருள்மிகு
## ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான
## ஏகதின இலக்ஷார்ச்சனைப் பெருவிழா

நிகழும் ஈசுர வருடம் தைமாதம் 4 ஆம் நாள் நாளை (17.01.1998) சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அர்ச்சனை ஆரம்பமாகும். பிற்பகல் 2.30 மணிக்கு அக்னி முகாந்தம், தர்ப்பணம் என்பன நடைபெற்று மாலை சண்டி ஹோமம், தாராஹோமம், விசேட திரவிய ஹோமம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து விசேடமாக அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் அம்பாள் வீதி உலா வருவார்.

''கிரியா கலாப முத்தாமணி'' சிவப்பிரம்மஸ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வர சிவாச்சாரியார் அவர்களின் நெறிப்படுத்தலில் இலக்ஷார்ச்சனைப் பிரதமகுரு ''சிவாகம கிரியாரத்தினம்'' ஈசான சிவாச்சாரியார் சிவப்பிரம்மஸ்ரீ சிவ நித்தியானந்தக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

தேவஸ்தான பரிபாலன சபையினர்
[52625]

## மாதகல் புனித செபஸ்தியார்
## ஆலயத் திருவிழா

மாதகல் புனித செபஸ்தியார் ஆலயத் திருவிழா இவ்வருடம் 18-01-98 ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படும். அன்று காலை 7.15 (புதிய நேரம்) மணிக்கு கூட்டுத் திருப்பலியும், அதனைத் தொடர்ந்து திருச் சுரூபப் பவனியும் இடம்பெறும்.

பங்குத் தந்தையும்,
பங்கு மக்களும்.

[52636]

## யாழ்ப்பாணக் கல்லூரி
## விவசாய நிறுவனம்

மருதனார்மடம் — சுன்னாகம்
இலவச குறுகியகால
விவசாயப் பயிற்சிநெறி

பிறப்புச் சான்றிதழ்—கல்வித்தகைமை
கிராமசேவகர் சான்றிதழ்
இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன்
19-1-98 காலை 9 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

— அதிபர்

(52622)

## பிரியாவிடையும், வரவேற்பும்

**யா / சங்குவேலி அ. த. க. பாடசாலை**

இடமாற்றம் பெற்றுச் செல்லும் அதிபர்
**திரு. செ. செல்வராசா**
(S L P S. II) அவர்களையும்,
புதிய அதிபராகக் கடமை ஏற்கும்
**திரு சு. சண்முககுலகுமாரன்**
(B. A, Sc Trd, S. L. P. . S III) அவர்களையும்,
பணி சிறப்புற வாழ்த்துகின்றோம்.

உப அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்,
நலன்விரும்பிகள்.

(52623)

சங்கரத்தை இந்துவாலிபர் சங்கத்தால்
நடத்தப்பட்ட
## சீட்டிழுப்பு முடிவுகள்

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு | 2352 |
| 2 ஆம் பரிசு | 2935 |
| 3 ஆம் பரிசு | 2141 |

மேலும் பத்து ஆறுதல் பரிசில்கள்.


| | | | | |
|---|---|---|---|---|
| 2286 | 2719 | 249 | 1571 | 2194 |
| 1907 | 2878 | 1011 | 1966 | 2507 |

வெ. மகிந்தன்
தலைவர்

(52617)

## நினைவஞ்சலி


### 31 ஆம் நாள



அமரர்
**சிதம்பரம் சின்னத்தம்பி**
**(மணியம்)**

மலர்வு:- 15 – 02 – 1933
உதிர்வு:- 17 – 12 – 1997

### 2 ஆம் ஆண்டு



அமரர்
**சின்னத்தம்பி கருணாகரன்**
(யாழ். தொழில் நுட்பக்கல்லூரி
HNDC முதலாம் ஆண்டு மாணவன்)

மலர்வு:- 07 – 06 – 1973
உதிர்வு:- 06 – 01 – 1996

மண்ணினில் வாழ்ந்த காலை மாதுயர் அகற்றி நின்றீர்
விண்ணினில் வாழுங் காலை வேண்டுவ யாவும் தாரீர்
நண்ணியே நம்மை நாளும் நலம்பெற வைப்பீர் நெஞ்சில்
எண்ணியே துதிக்கின் றோம்நாம் எம்மைநீர் ஆண்டருள்வீர்.


— குடும்பத்தினர்

''பொன் இல்லம்'',
ஆவரங்கால், புத்தூர்.

(52633)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 13 – 12 – 1944



உதிர்வு: 17 – 12 – 1997

**அமரர் தம்பு திருநாவுக்கரசு**
(சங்கானை ப. நெ. உ. வி. கூ. சங்கம்)

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய், பாசத்தின் இருப்பிடமாய், பண்பின் திருவுருவாய் வாழ்ந்து எம்மை அன்புடன் அரவணைத்து இன்புற வாழவைத்த தெய்வமே! உம் நினைவுகளை நம் கண்ணீர் அஞ்சலிப் பூக்களாய் உங்கள் காலடிக்குச் சொரிகின்றோம்.

அந்தியேட்டிக் கிரியைகள் 16-01-98 இன்று அவரின் இல்லத்தில் நடைபெறும். உறவினர், நண்பர்கள் கலந்து கொள்ளவும்.

மனைவி, மக்கள்.

இந்துக்கல்லூரியடி,
அராலி வடக்கு.

(52633)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈராறு மாத நினைவலைகள்



## சீவரட்ணம் உதயகுமார்

### ( கலட்டிக் கண்ணன் )

**பிறப்பு: 31 - 08 - 1964** **அழிப்பு: 16 - 01 - 1997**

வாச மல ரொன்று,
வண்ணக் குருவிகளோ ஐந்து...!
பெற்றவர்களுடன்
நேசப்பூவோ — மூன்று
பாசத்துடன் உனைத்
தேடுதையா!
தேன் மதுரத் தென்றலென...
வாழ்ந்த நின்
காதல் வாழ்க்கை...?
காணாமற் போனதென்று — உன்
காதலாள் ஏங்குகிறாள்.
ஆசையுடன் — ''அப்பா''
என்றழைக்க யாருளார் — என
உன் அன்புச் செல்வங்கள்
அல்லலாடுகின்றார்! பாவம்
பிஞ்சுகள் யாதுமறியார்!
''தம்பியுள்ளான் சண்டைக்கஞ்சான்''
அண்ணன் வாக்கு பொய்த்துப்போக
உதர பந்தம் கொண்ட
உள்ளமோ ஏங்குகிறதே!
சேத்தூரப் பாண்டியனே?
உன் வாழ்க்கை...!
வேண்டுமிங்கே நேசவனே!
என் செய்வோம் — நாம்

வாய் திறக்க வழியில்லை
உணவனுப்ப மட்டுமே — அது
திறக்கப்படலாம் — சட்டம்.
உன் வாழ்க்கை
மறைந்து போனதால் யாரிடம்
நீதி கேட்போம்!
ஆள்வோருமது...!!
அறுப்போருமது...!!!
உண்மை ஒருபோதும்
உறங்கியதில்லை
என்றோ வொருநாள்
விழித்துக் கொள்ளும் — என்று
நம்பி — நின் வாழ்வு
விண்ணுலகிலும்,
நின்று நிலைக்க
இறைவனே!
இறைஞ்சுகின்றோம்.
இனியவனே!
என்றுமே — உன்வாழ்வு இங்கு
விண்ணைத் தொட்டதுபோல்
விண்ணுலகிலும் வாழ்வாங்கு
வாழ நாம் இறைஞ்சுகின்றோம்.
ஜெயம்... ஜெயம் — நின்
வாழ்க்கை என்றுமே ஜெயம்.

மதுபான, குளிர்பானச் சோலை,
இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.

[இ/26381]

உன் நினைவைத் தாங்கிநிற்கும்:
அன்பு அண்ணன் (சுகு)
சுகுமாரன் குடும்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் தீர்வுத்திட்டம் வெற்றிபெற ஒன்றுபட்டு ஆதரவு வழங்குங்கள்

## யாழ். மக்களுக்கு அமைச்சர் மங்கள அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன.16

தமிழர்களின் நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசாங்கம் தீர்வுத்திட்டத்தை முன்வைத்துள்ளது. தெற்கில் இந்த தீர்வுத்திட்டத்துக்கு நல்ல ஆதரவு கிடைத்து வருகிறது. ஆகவே இத்தீர்வுத்திட்டம் நிறைவேற சகலரும் ஒன்றுபட்டு ஆதரவு வழங்கவேண்டும். தபால் தொலைத் தொடர்புகள் வெகுஜனத் தொடர்புசாதன அமைச்சர் மங்கள சமரவீர மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். வீடமைப்புத் திணைக்கள கட்டடத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட யாழ். பொதுசன நூலகத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் நூலகத்தை திறந்து வைத்த பின்னர் அங்கு நடந்த கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

மதகுருமார்கள், திணைக்களத் தலைவர்கள், படை அதிகாரிகள், அமைச்சர்களின் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்ட அக் கூட்டத்தில் அமைச்சர் தமது உரையில் தெரிவித்ததாவது:

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் யாழ். பொது நூலகம் நாசமாக்கப்பட்டது. இதனால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டதுடன் நாட்டுக்கு கெட்ட பெயரை இச் சம்பவம் சம்பாதித்துக் கொடுத்தது.

எமது அரசாங்கம் பதவியேற்ற பின்னர் நூலகத்தை மீளக் கட்டி எழுப்ப நடவடிக்கை எடுத்துள்ளோம். இவ்வாண்டு வரவு - செலவுத் திட்டத்தில் இந்த நூலக ஆரம்பப் பணிகளை மேற்கொள்ள ஜனாதிபதி 10 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளார். அத்துடன் தெற்கில் பாடசாலைகள் மூலம் இந்த நூலகத்தை கட்டி எழுப்ப நிதி சேகரித்து வருகிறோம். நூலகம் கட்டி எழுப்பப்படும் போது உதவிகள் அளித்த பாடசாலைகளின் பெயர்களும் நூலகத்தில் பொறிக்கப்படும்.

ஆரம்ப கட்டமாக நூலகத்தை தற்காலிக அடிப்படையில் இன்று இங்கு ஆரம்பிக்கிறோம். தனிநிலை சுமுகமாக இருக்கும் கட்டத்தில், விரைவில் நூலகத்தை கட்டி முடித்துவிடத்திட்டமிட்டுள்ளோம்.

தெற்கிலும், வடக்கிலும் வாழும் மக்களின் ஒற்றுமைச் சின்னமாக இந்த நூலகம் அமையும் என நம்புகிறோம்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சிவில் நிர்வாகத்தைக் கொண்டுவர அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு இந்த நூலகம் அமைவது முக்கிய ஒன்று கோலாக அமையும் என அரசாங்கம் நம்புகிறது.

தைப்பொங்கல் தினமான இன்று சூரிய பகவானை வணங்கி அவரின் ஆசியைப் பெறுவது இந்துக்களின் வழக்கமாகும். இன்றைய நாளில் சூரிய பகவானின் ஆசி சமாதானத்தை நாட்டில் நிலைநிறுத்த உதவும் என நம்புகிறோம் — என்று தெரிவித்தார். (ஐ-3)

# இந்துநாகரிக கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ் பல்கலைக் கழக இந்துநாகரிகத்துறையினர் ஏற்பாடு செய்துள்ள ''இந்து நாகரிகம்-பன்முகப் பார்வை'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு நாளை சனிக்கிழமை கைலாசபதி கலையரங்கில் இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

காலை 9.30 மணிமுதல் 11 மணிவரை நடைபெறும் முதலாவது அமர்வில்—

''இந்து நாகரிகத்தில் ஆலயம்'' என்னும் தலைப்பில் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன், ''இந்துநாகரிகத்தில் வழிபாடு'' (கிரியைகள்) என்னும் தலைப்பில் திருமதி நாச்சியார் செல்வநாயகம், ''இந்துநாகரிகம்—வரலாற்று நோக்கு'' என்னும் தலைப்பில் செ. கிருஷ்ணராஜா, ''இந்து நாகரிகம் - பிரசமய நோக்கு'' என்னும் தலைப்பில் வண.பிதா ஜி பிரேன்திரன் ''இந்து நாகரிகம் - மெய்யியல் நோக்கு'' என்னும் தலைப்பில் கலாநிதி நா. ஞானகுமாரன் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

முற்பகல் 11.10 முதல் நண்பகல் ஒரு மணிவரை நடைபெறும் இரண்டாவது அமர்வில்—

''இந்துநாகரிகத்தில் அறிவியல்'' என்னும் தலைப்பில் திருமதி கலைவாணி இராமநாதன், ''இந்துநாகரிகம் - இலக்கிய நோக்கு'' என்னும் தலைப்பில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் ''இந்துநாகரிகம் - வடமொழி நோக்கு'' என்னும் தலைப்பில் பேராசிரியர் வி. சிவசாமி, ''இந்து நாகரிகம் - நுண்கலை நோக்கு'' என்னும் தலைப்பில் செல்வி பா. சித்ராங்கி, ''இந்துநாகரிகம் - ஒப்பியல் நோக்கு'' என்னும் தலைப்பில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

ஜி சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இக்கருத்தரங்கு பெரிதும் பயன்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தமிழருக்கு பிரச்சினை இருப்பதை எமது அரசே முதலில் ஏற்றது

## அமைச்சர் பத்திரன தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 16

இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு பிரச்சினை உள்ளது என்பதை முதலில் எமது அரசாங்கமே ஏற்றது. இனப்பிரச்சினை இந்நாட்டில் இருக்கும் வரை அபிவிருத்தி காண முடியாது என்பதையும் எமது அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. ஆகவே தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளைப் போக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுள்ளது.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இடைக்கால யாழ். பொதுசன நூலகத்தை ஆரம்பிக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

நீண்டகால யுத்தத்தினால் அழிவுபட்டுப் போயிருக்கும் யாழ்ப்பாணத்தைக் கட்டி எழுப்ப எமது அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் என்ற முறையில் கல்வி அபிவிருத்திக்கு பல்வேறுபட்ட உதவிகளை வழங்கி வருகிறேன். கட்டட வசதிகள், உபகரண வசதிகள் பெருமளவில் வழங்கப்பட்டுள்ளன. மேலும் உதவிகள் வழங்கப்படவிருக்கின்றன.

யாழ். பல்கலைக்கழகத்தின் பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்து வருகிறோம். அதனை சகலவசதிகளும் கொண்ட தேசிய பல்கலைக்கழகமாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

வடக்கு — கிழக்கில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நீக்க மூன்றுமாத காலத்துக்குள் நடவடிக்கை எடுக்கும்படி வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்.

யாழ்ப்பாணத்தில் கல்விக் கல்லூரி ஒன்றை இவ்வருட முடிவுக்குள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக 35 கோடி ரூபா செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் வீதி, மற்றும் வைத்தியசாலைப் பிரச்சினைகள் உட்பட சகல பிரச்சினைகளையும் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகால யுத்தம் காரணமாக சீரழிந்து போயுள்ள யாழ்ப்பாணத்தை மீளக்கட்டி எழுப்ப அரசு பல்வித நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

தமிழ் மக்களின் வரலாற்றில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை எமது அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அதை நீக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. எல்லா இன மக்களும் தன்மானத்துடனும் சமாதான சூழலிலும் வாழவேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும். இதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

பல வருடகாலமாக தொடரும் யுத்தத்தின் விளைவு என்ன? பல ஆயிரம் உயிர்கள் பலியாகின. பல கோடி ரூபா பெறுமதியான உடைமைகள் நாசமாகின இதனால் யாருக்கு நன்மை கிடைத்தது?

அரசியல் தீர்வு ஒன்றின் மூலமே இன்றைய நிலைக்கு தீர்வுகாண முடியும். நாட்டில் உள்ள சகல மக்களும் ஒற்றுமையாகவும், சகோதரத்துவத்துடனும் வாழ இதுவே ஒரே வழியாகும்.

இதற்காகவே

அரசியல்தீர்வு யோசனைகளை நிறைவேற்ற ஆதரவு தருமாறு சகலரிடமும் நாம் கோருகிறோம் என்று தெரிவித்தார். [ஐ-3]

# நூலகம் அமைக்கப்படும் நிகழ்வு சமாதானத்துக்கான மைல் கல்

## பிரிட்டிஷ் தூதர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 16

''நாட்டில் சமாதானம் ஏற்பட இன்றைய நிகழ்வு ஒரு மைல்கல்லாக அமையும் எனக் கருதுகிறேன்.''

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதர் டேவிட் ஹத்தம் முன் கண்டவாறு தெரிவித்தார்.

இடைக்கால யாழ். பொதுசன நூலகத்தின் ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று இந்த வைபவத்தில் கொழும்பில் உள்ள சகல வெளிநாட்டுத் தூதுவர்களின் சார்பிலும் நான் கலந்து கொள்கிறேன்.

இன்று தற்காலிக கட்டடத்தில் அமைக்கப்படும் இந்த நூலகம் விரைவில் புதிய கட்டடத்தில் அமையும் என எதிர்பார்க்கிறோம்.

இங்கு புதிய தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ளதால், யாழ் நூலகத்தினர் கொழும்பு, கண்டி ஆகிய இடங்களில் உள்ள எமது நூலகங்களுடன் தொடர்பு கொள்ள வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இங்குள்ள புத்திஜீவிகள், திணைக்களத்தலைவர்கள், கொழும்பு வந்து தங்களுக்குத் தேவையான உதவிகளைக் கேட்டால், உபகரண உதவி முதல் சகல உதவிகளையும் வழங்க நாம் தயாராகவுள்ளோம்.

இன்று இங்கு நடைபெறும் நிகழ்வு சமாதானத்தைக் காணும் முயற்சியின் மைல் கல்லாக அமையும் என நம்புகிறோம். விரைவில் சமாதான சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்பதே சகலரின் விருப்பமாகும் — என்று கூறினார்.

### மேஜர் ஜெனரல் பலகல்ல

வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல உரையாற்றுகையில் கூறியதாவது:

பலரின் ஒத்துழைப்பால் இந்த இடைக்கால நூலகத்தை அமைக்க முடிந்தது. புத்தாண்டுடன் இந்த நூலகம் பூரணப்படுத்தப்பட்டு புதிய யாழ். மேயரிடம் ஒப்படைப்போம் என நம்புகிறோம் — என்றார்.

### யாழ். ஆயர்

யாழ். ஆயர் அதிவந். தோமஸ் சௌந்தரநாயகம் ஆசியுரை வழங்குகையில் கூறியதாவது;-

இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நூலகம் எமது மாணவர்களின் கல்வி, தொழில் நுட்பக்கல்வி வளர்ச்சிக்கு உதவும். அதே நேரம் பழைய நூலகமும் கட்டி எழுப்பப்பட்டு எமது மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

இந்த நூலகத்தைக் கட்டி எழுப்ப கொழும்பில் நடந்த கூட்டத்தில், யாழ். நூலகம் வடக்குத்-தெற்கு மக்களின் சின்னமாக இருக்கவேண்டும் என்று ஜனாதிபதி கூறினார்.

ஆகவே இன்றைய யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து [illegible] வேண்டும்—

(9 ஆம் பக்கம் பார்க்க)

# ஏணையில் தீப்பிடித்து குழந்தை உடல் கருகியது

யாழ்ப்பாணம், ஜன. 16

ஏணையில் தீமூண்டதில் அதனுள் உறங்கிக் கொண்டிருந்த ஐந்து மாதக் குழந்தை பலத்த தீக்காயங்களுக்கு உள்ளாகிப் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இருபாலை ஆனந்தபுரம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

கோகுல்ராஜ் ஜனந்தன் என்ற கைக் குழந்தையே இவ்வாறு தீக்காயத்துக்கு இலக்கானது.

இரவு வேளை தாயார் குழந்தையை ஏணையில் உறங்கவைத்துவிட்டு வெளியே சென்றுவிட்டார். ஆடிக்கொண்டிருந்த ஏணை அருகே எரிந்து கொண்டிருந்த குப்பி விளக்கில் பட்டதால் ஏணைச் சேலையில் தீமூண்டது குழந்தையின் அழுகுரல் கேட்டு தாயார் ஓடிவந்து பார்த்தபோது ஏணை முற்றாக எரிந்து கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9-8)

மட்டு. நகரில்

# மோ. சைக்கிள்கள் தீவிர சோதனை

மட்டக்களப்பு ஜன. 16

மட்டக்களப்பு நகரில் விடுதலைப்புலிகள் மோட்டார் சைக்கிள் குண்டுத்தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகப் பாதுகாப்புத் தரப்பினருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத் தகவல்களின் பிரகாரம் நேற்று முன்தினம் நகருக்குள் நுழைந்த சகல மோட்டார் சைக்கிள்களும் சோதனையிடப்பட்டன.

சாரதி அனுமதிப்பத்திரம், பதிவுப்பத்திரம், காப்புறுதி உட்பட சகல ஆவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டன. (ஐ-21)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதயன்

## புதிய கல்வி முறை

அரசாங்கத்தின் புதிய கல்விக் கொள்கை ஆரம்பக்கல்வியுடன் தொடங்கியுள்ளது. ஆரம்ப வகுப்புக்கான புதிய கல்வித் திட்டத்தை ஜனாதிபதி கடந்த செவ்வாய்க்கிழமை கம்பஹா மாவட்டத்தில் உத்தியோகபூர்வமாகத் தொடக்கி வைத்தார். புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்திற்கு உரிய வசதிகள் கம்பஹா மாவட்டத்தில் செய்யப்பட்டு, அதன் பின்னரே புதிய முறை அமுலுக்கு வந்திருக்கிறது.

ஏனைய மாவட்டங்களிலும் இந்த வசதிகள் செய்யப்பட்டு படிப்படியாக புதிய ஆரம்பக் கல்வித் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் ஜனாதிபதியின் ஆலோசகர் டாக்டர் தாரா டி மெல் விடுத்த அறிக்கை ஒன்றில் இத்தகவல் வெளியாகியுள்ளது.

புதிய கல்விக் கொள்கையை, அதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முதலாவது கட்டமே கம்பஹாவில் அறிமுகப்படுத்தப்படுள்ள புதிய ஆரம்பக் கல்வித் திட்டம்—

1999 ஆம் ஆண்டில் இப்புதிய கல்விமுறை நாடு முழுவதிலும் நடைமுறைக்கு வந்துவிடும். அப்போது தரம் -6, தரம் - 9 ஆகிய வகுப்புகளிலும் புதிய கல்விக் கொள்கை அமுலுக்கு வந்துவிடும் — ஜி. சி. ஈ. உயர்தர வகுப்புக்குரிய புதிய கல்வித் திட்டம் இந்த வருடம் 1998 ஓகஸ்ட் முதல் நடைமுறைப்படுத்தப்படும் — இந்தத் தகவல்களை யும் டாக்டர் தாராவே தெரிவித்துள்ளார்.

மக்களினது நல்வாழ்வுக்கும், நாட்டின் அபிவிருத்திக்கும் அத்திவாரமாக அமைவது கல்வியே, ஆகையால் கல்வி முறையில் மாற்றம் தேவை என்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு விடயம்.

எமது நாட்டுக்கும் புதிய கல்வி முறை ஒன்று தேவைப்படுகிறது என்பது உண்மையே கல்வித்திட்டங்களில் அடிப்படையான பலமாற்றங்களைச் செய்ய வேண்டி உள்ளது ஏட்டுக்கல்வி முறை வாழ்க்கைக்குரிய கல்வியாகவும், தொழிற் பயிற்சி நிறைந்த கல்வியாகவும் மாற்றப்படுவது அவசியம்.

இந்த வகையில் அரசாங்கம் புதிய கல்விக் கொள்கையை - திட்டத்தை- தயாரித்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது புதிய கல்விக்கொள்கை குறித்த விவரங்கள் இன்னும் மக்களைப் பெரிதாக எட்டவில்லை. அரசியல், கல்வித்துறை வட்டங்களுக்குள்ளேயே இன்னமும் கிடக்கிறது.

கல்வித் திட்டங்கள் இந்த நாட்டில் அடிக்கடி மாற்றப்படுகின்றன. ஆனால் அந்த மாற்றங்கள் அனேகமாக நாட்டின் தேவையைக் கருதியவையாக அன்றி, அரசியலாளரின் விருப்பத்தை நாடியவையாகவே அமைந்து விடுகின்றன.

முந்திய அரசு செய்ததை நாம் மாற்றத்தான் வேண்டும்' என்ற மிகவும் கீழ்த்தரமான போக்குடன் கல்விததிட்டங்கள், பாடத்திட்டங்கள் மாற்றப்பட்டதால் நாட்டின் கல்வியே குளறுபடியாகி விட்டது.

ஒரு உதாரணம்: வகுப்பு நீண்ட காலமாக ''தரம்'' என்று அழைக்கப்பட்டது பின்னர் அது ''ஆண்டு'' ஆகியது. இப்போது மீண்டும் ''தரம்'' ஆகுகின்றது.

இத்தகைய சின்னத்தனமான மாற்றங்கள் கல்வி நிலையை முன்னேற்றாது ஆக்கபூர்வமான, அறிவு பூர்வமான கல்வி முறை மாற்றமே நாட்டை அபிவிருத்திக்கு இட்டுச் சென்று நல்ல பிரஜைகளை உருவாக்கும்.

## பல்கலை அனுமதி வெட்டுப்புள்ளி விவரம்:-

| | கொழும்பு | கம்பஹா | களுத்துறை | மாத்தளை | கண்டி | நுவரெலிய | காலி | மாத்தறை | அம்பாந்தோட்டை | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | மன்னார் | முல்லைத்தீவு | வவுனியா | திருகோணமலை | மட்டக்களப்பு | அம்பாறை | புத்தளம் | குருநாகல் | அநுராதபுரம் | பொலநறுவை | பதுளை | மொனராகலை | கேகாலை | இரத்தினபுரி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மருத்துவம் | 280 | 266 | 271 | 257 | 278 | 222 | 277 | 278 | 268 | 275 | 221 | 244 | 234 | 241 | 240 | 261 | 260 | 267 | 270 | 244 | 250 | 255 | 222 | 271 | 258 |
| பல் மருத்துவம் | 278 | 265 | 275 | 254 | 277 | 220 | 276 | 277 | 267 | 277 | 218 | 228 | 233 | 240 | 238 | 259 | 257 | 266 | 268 | 243 | 246 | 254 | 220 | 270 | 256 |
| மிருக வைத்தியம் | 275 | 263 | 269 | 252 | 275 | 219 | 274 | 275 | 266 | 274 | 210 | 218 | 231 | 234 | 237 | 258 | 266 | 265 | 266 | 242 | 241 | 252 | 219 | 269 | 255 |
| விவசாயம் | 263 | 255 | 261 | 243 | 261 | 212 | 263 | 264 | 261 | 262 | 208 | 208 | 230 | 232 | 230 | 252 | 243 | 256 | 259 | 233 | 235 | 248 | 216 | 260 | 251 |
| விவசாய விஞ்ஞானம் | 252 | 245 | 252 | 235 | 251 | 209 | 253 | 253 | 246 | 249 | 206 | 189 | 225 | 231 | 220 | 224 | 240 | 242 | 250 | 225 | 228 | 228 | 205 | 250 | 243 |
| உயிரியல் விஞ்ஞானம் | 258 | 246 | 255 | 235 | 253 | 195 | 258 | 258 | 247 | 250 | 187 | 181 | 209 | 207 | 211 | 237 | 227 | 244 | 251 | 224 | 220 | 229 | 203 | 251 | 239 |
| பொறியியல் I | 278 | 261 | 269 | 235 | 267 | 184 | 277 | 276 | 253 | 274 | 196 | 213 | 253 | 242 | 235 | 234 | 219 | 256 | 259 | 219 | 220 | 239 | 198 | 254 | 241 |
| பொறியியல் II | 272 | 257 | 266 | 233 | 264 | — | 271 | 273 | 250 | 273 | 187 | 208 | 221 | 234 | 231 | 233 | 218 | 253 | 257 | 215 | 197 | 237 | 195 | 251 | 238 |
| புடைவைக் கைத்தொழில் | 269 | 256 | 265 | 215 | 261 | — | 269 | 267 | 242 | 269 | — | — | 238 | 226 | 229 | 228 | 216 | 247 | 225 | 208 | 189 | 234 | 190 | 247 | 236 |
| புள்ளி விவரவியல் | 266 | 255 | 263 | 231 | 259 | — | 266 | 263 | 245 | 266 | 180 | 183 | 210 | 224 | 228 | 230 | 215 | 246 | 252 | 214 | 186 | 233 | — | 249 | 235 |
| கட்டட நிர்மாணம் | 214 | 222 | 208 | — | 211 | — | 212 | 190 | — | — | — | — | — | — | — | 184 | 192 | 189 | 209 | — | — | 212 | — | 221 | 200 |
| கணனி விஞ்ஞானம் | 267 | 255 | 265 | 230 | 260 | 221 | 268 | 264 | 238 | 266 | — | 194 | 218 | 218 | 222 | 227 | 214 | 243 | 256 | 213 | 215 | 236 | 188 | 246 | 240 |
| பௌதிக விஞ்ஞானம் | 225 | 215 | 217 | 181 | 208 | 180 | 220 | 203 | 185 | 224 | — | — | 181 | 196 | 187 | 197 | 180 | 190 | 204 | 181 | 183 | 181 | 185 | 211 | 197 |
| முகாமைத்துவம் (O) | 294 | 292 | 293 | 280 | 289 | 281 | 292 | 291 | 287 | 292 | 287 | 269 | 284 | 269 | 275 | 279 | 279 | 283 | 209 | 273 | 286 | 289 | 278 | 291 | 284 |
| முகாமைத்துவம் (RSJ) | 278 | 278 | 278 | 265 | 277 | 264 | 279 | 298 | 275 | 279 | 270 | 257 | 276 | 264 | 262 | 272 | 269 | 275 | 278 | 258 | 262 | 274 | 267 | 278 | 274 |
| வர்த்தகம் | 283 | 282 | 282 | 270 | 279 | 269 | 282 | 282 | 277 | 282 | 273 | 259 | 280 | 263 | 264 | 274 | 271 | 276 | 282 | 263 | 265 | 275 | 268 | 279 | 276 |
| சட்டம் | 295 | 290 | 296 | 286 | 285 | 264 | 297 | 292 | 291 | 279 | 249 | 249 | 274 | 264 | 287 | 272 | 289 | 291 | 295 | 285 | 274 | 284 | 262 | 292 | 287 |
| கலை (O) | 260 | 266 | 266 | 262 | 264 | 245 | 266 | 265 | 266 | 266 | 266 | 249 | 266 | 266 | 264 | 266 | 266 | 265 | 265 | 265 | 252 | 260 | 251 | 265 | 264 |
| கலை (RS) | 272 | 272 | 272 | — | 272 | — | 272 | 272 | 272 | 272 | — | — | 272 | — | — | — | — | 272 | 272 | 272 | — | | — | 272 | 272 |
| பிரயோக விஞ்ஞானம் I | 214 | 209 | 213 | — | 205 | — | 212 | 201 | 183 | 215 | — | — | — | 189 | 197 | 196 | 207 | 186 | 201 | — | — | 204 | — | 206 | 189 |
| பிரயோக விஞ்ஞானம் II | 251 | 244 | 251 | 232 | 250 | 193 | 251 | 251 | 245 | 247 | — | — | 208 | 206 | 218 | 236 | 239 | 248 | 249 | 223 | 218 | 227 | 202 | 250 | 238 |
| பிரயோக விஞ்ஞானம் III (உயிரியல்) | 249 | 243 | 249 | 231 | 249 | 189 | 249 | 249 | 244 | 249 | — | — | 207 | 200 | 209 | 235 | 234 | 243 | 248 | 223 | 216 | 225 | 196 | 249 | 237 |
| பிரயோக விஞ்ஞானம் III (பௌதிகம்) | 211 | 206 | 209 | — | 203 | — | 211 | 204 | 182 | 212 | — | — | — | 188 | 192 | 191 | — | 185 | 200 | — | — | — | — | 205 | 188 |
| பிரயோக விஞ்ஞானம் VI | 247 | 248 | 247 | 231 | 247 | 183 | 247 | 247 | 243 | 246 | — | — | 206 | 195 | 197 | 235 | 226 | 241 | 247 | 222 | 217 | 223 | 189 | 247 | 236 |
| பிரயோக விஞ்ஞானம் (கலை) | 254 | 242 | 260 | 256 | 263 | 243 | 262 | 258 | 249 | — | — | — | — | — | 231 | — | 265 | 261 | 263 | 235 | 255 | 257 | 250 | 262 | 257 |
| அளவையியலும் விஞ்ஞானமும் | 222 | 215 | 215 | 192 | 203 | — | 225 | 212 | 218 | 220 | [illegible] | — | — | 195 | 217 | 219 | 211 | 202 | 210 | 191 | 193 | 221 | — | 209 | 200 |

## நூலகம் ..

(எட்டாம் பக்கத்தொடர்)

என்றார்.

### விகாராதிபதி

நாகதீபவிகாராதிபதி தமது ஆசியுரையில் கூறியதாவது:- தென்னாசியாவிலேயே பெரிய நூலகமாக அமைந்திருந்த யாழ். நூலகம் கடந்த கால யுத்தத்தினால் சீரழிந்துபோயுள்ளது. ஜனாதிபதியின் விசேட உத்தரவின் பேரில் வடபிராந்திய படை அதிகாரிகளின் முயற்சியால் அது ஓரளவு புனரமைக்கப் பட்டு இயங்கத் தொடங்கியுள்ளது. இந்த நூலகம் நிரந்தர இடத்தில் அமைய சகலரும் உதவ வேண்டும்.

இந்த நாட்டில் யுத்தத்தால் சீரழிந்த நிலைமாறி சமாதான சூழ்நிலை ஏற்பட சகலரும் ஒன்றிணைந்துபாடுபட வேண்டும். அப்போதுதான் நாடு அபிவிருத்தியை நோக்கிச் செல்லமுடியும் — என்றார்.

### நூலக அபிவிருத்தி குழுஉறுப்பினர்

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நூலக அபிவிருத்திக் குழு உறுப்பினரான முன்னாள் அரச அதிபர் யோகேந்திரா துரைச்சாமி தமது உரையில் —

1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி இந்த நூலகம் தீயிட்டப்பட்டதை நேரில் கண்ட சாட்சிகளில் நானும் ஒருவன். அன்று தீயை அணைக்க முயற்சி எடுத்தோம். தீயை அணைக்க உதவியாளர்களும் இல்லை. தீயை அணைக்க இயந்திரமும் அன்று இல்லை. அதனால் தீயை அணைக்க முடியவில்லை.

16 வருட காலத்தின் பின்னர் இன்று நூலகத்தை கட்டி எழுப்ப நடவடிக்கை எடுத்துள்ளோம். இந்த முயற்சிகைகூடி பழைய நூலகம் விரைவில் கம்பீரத்துடன் காட்சி தரவேண்டும்— என்றார்.

யாழ். மாநகர ஆணையாளர் வி.பி. பாலசிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்த வைபவத்தில் சமூக சேவைகள் அமைச்சர்பேர்ட்டி பிரேமலால் திஸநாயக்க, பதுளை நாடாளுமன்ற உறுப்பினர் டியான் பெரேரா மற்றும் பிரிட்டிஷ் கவுன்ஸில் அதிகாரிகள், அமைச்சு அதிகாரிகள், யாழ். திணைக்களத் தலைவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

யாழ் அரச அதிபர் க.சண்முகநாதன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி. ஆர். எல். எவ். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் பங்கு கொண்டனர்.

கொழும்பில் இருந்து வந்த வெளிநாட்டு, உள்நாட்டு செய்தியாளர்கள் பெரும்எண்ணிக்கையில் பங்குகொண்டனர்

யாழ். நூலகத்துக்கு புத்தகங்களை வழங்கிய கம்யூனிஸ் கட்சித் தலைவர் அமரர் பீற்றர் கெனமனின் மனைவி மற்றும் நூல்கள் வழங்கிய பலரும் அந்த வைபவத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

நூலகம் அமைக்கப்படுவது தொடர்பாக ஜனாதிபதி விடுத்த செய்தியும், வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் விடுத்த செய்தியும் வீடியோ மூலம் ஒளிபரப்பப்பட்டது. (ஐ-3)

## நாளை

**தை 4**

சனிக்கிழமை

திதி: பஞ்சமி

காலை 6.16 வரை.

நட்சத்திரம்: பூரம்

பிற்பகல் 4.03 வரை.

சுபநேரம்: 3 35 5.05

ராகுகாலம்: 9 35-11.05

(பகலுக்கும் இரவுக்கும் உரிய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதிக்கும் இன ஒற்றுமைக்கும் அனைவரும் உழைக்கவேண்டும்

## தென்பகுதி நிறுவனங்கள் வாழ்த்து

கொழும்பு ஜன. 16

இந்த நாட்டில் உள்ள இருபெரும் இனங்களான சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒரே தாய் மக்கள். இந்த நாட்டின் அமைதிக்காகவும் அனைவரும் உழைக்க வேண்டும்.

மேற்கண்டவாறு தென் பகுதியில் இயங்கும் சமாதி நிறுவனம் ஸ்ரீகாந்தி ஆச்சிரமம் ஆகியவை விடுத்த பொங்கல் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

50 ஆண்டுகளுக்கு முன் சிங்கள — தமிழ் தலைவர்கள் இந்த நாட்டின் சுதந்திரத்துக்காக ஒன்றிணைந்து போரடினார்கள்.

இன்றைய தமிழ் தலைவர்களும் முன்னைய தலைவர்களின் பாதையில் தாய்நாட்டின் நலனுக்காக பாடுபட வேண்டும் என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### கூட்டணி...

(முதலாம் பக்கத் தொடர்)

தபா தமது வாதங்களை முன் வைத்து வாதிட்டார்.

அதைத் தொடர்ந்து தேர்தல் ஆணையாளர் மற்றும் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் கே. ஸி. கமலசபேசன் தமது தரப்புவாதங்களை எடுத்துக் கூறினார்.

அதைத் தொடர்ந்து நீதியரசர்கள் இன்றுவரை விசாரணையை ஒத்திவைத்தனர். (இ-3)

### நாலக...

(முதலாம் பக்கத் தொடர்)

அழைத்து வந்ததாகத் தெரிய வந்தது.

இந்த வைபவத்தில் ஆசியுரை வழங்க அழைக்கப்பட்டிருந்த நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும் திரும்பிச் சென்று விட்டார்.

சோதனைக்கு உள்ளாக்கப்பட்டே உள்ளே அனுமதிக்கப் படுவார் எனத் தெரிவிக்கப் பட்டதையடுத்தே அவரும் திரும்பிச் சென்றதாகக் கூறப் பட்டது.

இப்படித் திரும்பிச் சென்றோரில் யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர்கள், வலயம்-1 கல்விப் பணிப்பாளர் மற்றும் பல அதிகாரிகள் அடங்குவர்.

வைபவத்தில் உரையாற்றிய வட பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்ததால் பல அதிகாரிகள் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டமைக்காக தமது கவலையை வெளியிட்டார்.

இவ்வைபவத்தில் மூன்று அமைச்சர்கள், இராணுவத் தளபதி றோகான் தளுவத்த உட்படப் படைகளின், பொலீஸ் அதிகாரிகளும் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்)

கிய பார்சல் ஒன்று நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டது.

இப்பார்சலுக்கு எவரும் உரிமை கோரவில்லை என்று கொழும்பு கோட்டை பொலீஸார் தெரிவித்தனர். (இ-7)

### வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்)

பெற்றது.

ரம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம், வவுனியா மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றுக்கு சென்ற மாணவர்கள் அங்கு செல்லவிடாது படையினரால் தடுக்கப்பட்டனர்.

வித்தியாலயங்களின் அதிபர்கள், செஞ்சிலுவைச் சங்கத்தலைவர் சிவநாதன் கிஷோர் ஆகியோர் அரச அதிபர் ஊடாக இராணுவ அதிகாரியுடன் தொடர்பு கொண்டதையடுத்து, அவர்கள் பாடசாலைக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

நகருக்குள் மக்கள் செல்ல அனுமதிக்கப்பட்டது. வெளியே வர அனுமதிக்கப் படவில்லை.

நேற்றைய தேடுதலின் காரணமாக வியாபாரம் பாதிக்கப்பட்டிருந்தது. மக்கள் நடமாட்டம் ருக்கவில்லை. (இ-8)

யாழ் மாநகரசபையின்

# மின் விநியோக கோவைகளை மின்சாரசபை பொறுப்பேற்கும்?

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ்.மாநகரசபையின் மின்சார விநியோகம் சம்பந்தமான கோவைகள் அனைத்தையும் ஒரு வாரத்தில் இலங்கை மின்சாரசபை பொறுப்பேற்க இருப்பதாகத் தெரியவருகிறது.

முன்னைய காலங்களில் யாழ். மாநகரசபையே யாழ். நகரப்பகுதிக்கான மின்சாரத்தை வழங்கி வந்தது.

இடம்பெயர்வின் பின் இலங்கை மின்சாரசபை மின் விநியோகத்தை ஜெனரேட்டர் மூலம் வழங்கி வந்தது.

தற்பொழுது மாநகரசபையிடமிருந்து மின்சாரவிநியோகம் தொடர்பான கோவைகளையும் இலங்கை மின்சாரசபை பொறுப்பேற்க உள்ளது.

ஒருவார காலத்தில் இந்தக் கோவைகளை இலங்கை மின்சாரசபை பொறுப்பேற்று விடும் என்று தெரிகிறது.

### ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்)

விக்க மேலும் கால அவகாசத்தைக் கேட்பது நியாயமற்றது.

எவ்வாறாயினும் இம்மாதம் 31 ஆம் திகதிக்குப் பின்னர் தீர்வு யோசனைகள் தொடர்பான எதிர் காலத் திட்ட இலக்குகளை வகுப்பதற்கு எமது அரசாங்கம் எண்ணியிருக்கின்றது. அதற்கு முன் ஐ.தே. கட்சி பூர்வமான யோசனைகளை முன் வைத்தால் அவை பற்றிக் கவனம் செலுத்துவதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளது.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-7)

### நந்தா காலமானார்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் குல்சிலால் நந்தா நேற்று தனது 99 ஆவது வயதில் அகமதாபத்தில் காலமானார்.

1964 இல் நேருமறைந்த பின்பும் 1966 லால் பகதூர் சாஸ்திரி மறைந்த பின்பும் இருதடவைகள் இவர் தற்காலிகமாக பிரதமர் பதவியை வகித்திருந்தார். (இ-7)

### வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

யாக இது இருக்கலாம் எனப் பொலீசார் தெரிவித்தனர்.

வவுனியாவில் இவ்வாரத்தில் பொலீசார் கொலைப்பட்டமை 2 ஆவது சம்பவம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை வவுனியா சந்தைப் பகுதியில் வைத்து சப் - இன்ஸ்பெக்டர் ஒருவர் சுட்டுக் கொல்லப் பட்டிருந்தார். (இ-3)

# மரண அறிவித்தல்கள்

## வினாசித்தம்பி குமாரவேலு

மடத்தடி சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த வினாசித்தம்பி குமாரவேலு 15-1-1998 இல் (நேற்று) காலமானார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற ஆறுமுகம், சின்னம்மா, நடராசா மற்றும் பொன்னையா, தங்கராணி ஆகியோரின் சகோதரரும், லிங்கேஸ்வரி, சகுந்தலாதேவி, லிங்கேஸ்வரன் (சித்திரன்), ரஞ்சிதமலர், சிவனேஸ்வரன் (சுவிஸ்), சாந்தகுமார் (வேலி, சுவிஸ்), சந்திரகுமார் (சுவிஸ்), ஜெயகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமநாதன் (மாணிக்கம் பிறதர்ஸ்), பாஸ்கரன், இராசரூபி, குணரட்ணராசா (அழகர்), ஜெயந்தி (சுவிஸ்), ஜெயராசா (குறிஞ்சி) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
லிங்கேஸ்வரன் (சித்திரன்)
(மகன்)

(52631)

## காசிநாதன் தேவராஜன்

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட காசிநாதன் தேவராஜன் (முன்னாள் நிலஅளவையாளர்) 13-1-98 இல் காலமானார்.

அன்னார் உஷாவின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற காசிநாதன் (மலாயன் பென்சனியர்) மற்றும் திருமதி காசிநாதன் பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கட்டுடையைச்சேர்ந்த திரு. திருமதி சண்முகதாசன் ஆகியோரின் அன்பு மருமகனும், திருமதி கதிரமலை (சிங்கப்பூர்) ஆனந்தகிருஷ்ணர் (மட்டக்களப்பு), காலஞ்சென்ற ஹரிகிருஷ்ணன் (காசிநாதன் அன்கோ), திருமதி சரஸானந்தராஜா சத்தியபாமா, கமலாதேவி, திருமதி காசிநாதன் சாந்திமதி, ஜெகநாத் (உபதபால் அதிபர் சங்குவேலி), ஜோதிநாதன் (சாமுவேல் அன் சன்ஸ், யாழ்ப்பாணம்), ஞானசாகரம் (Holland) திலகதேவி (ஆசிரியை Manns School, Uduvil) திருமதி கெங்காதரன் உமாதேவி (சிங்கப்பூர்), சப்தசமுத்திரம் (Auto Electrician, cement Factory K. K. S - பிரான்ஸ்), கேதீஸ்வரி (தட்டெழுத்தாளர், விவசாயக்கந்தோர், திருநெல்வேலி), வர்ணராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயலட்சுமி (Terminal Receptionist, சிங்கப்பூர் Airline, சிங்கப்பூர்), தனலட்சுமி (Kandan Kevbu Hospital, சிங்கப்பூர்), பரமநாதன் (பொறியியலாளர் சிங்கப்பூர்), கேதீஸ்வரி (Clerk சிங்கப்பூர் Airline, சிங்கப்பூர்), சிவராஜா (டென்மார்க்), சத்தியராஜா (பிரான்ஸ்), பிரியதர்சினி (மீனுகா) (மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி, A/L 98), வேணுகா ஆகியோரின் அன்பு மாமனாரும், திவாகர் (மாணவன் யாழ். இந்துக் கல்லூரி A/L99) குளோரிகா (மாணவி உடுவில் மகளிர் கல்லூரி O/L 98), வதனி (கொழும்பு - வெள்ளவாரி பட்டதாரி மாணவி), கிளேனி (கொழும்பு), சிறீ (கொழும்பு), சரிகரன் (மாணவன், கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி A/L 98) ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கா. ஜெகநாத்
(உப தபால் அதிபர், சங்குவேலி)
ஹரிகிருஷ்ணா,
சங்குவேலி,
மானிப்பாய்.

Mrs U. Devarajan
Appt. E. 702
23, Ave. Andre Malraux
92300 Levallois Parrel
France.

(52630)


எமது புதிய வெளியீடுகள்

சரத்குமார், தேவயானி நடித்த
மூவேந்தர்
ஒரிஜினல் வெளியீடு
ராதிகாவின்
ராணிமகாராணி
சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.
புதிய படப் போஸ்டர்கள் எம்மிடம் உள்ளன.
(இ/2661)

எமது புதிய வெளியீடு!
சரத்குமார்- தேவயானி நடித்த
மூவேந்தர்
வீடியோவிமல்
யாழ்ப்பாணம்.


# நன்றி நவிலல்

பல வருடங்களாகக் கைவிடப்பட்ட நிலையில் இருந்த லங்கா சோல்ட் லிமிட்டெட் ஊழியர்களாகிய எமது துயரை ஜனாதிபதியவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து எமது சம்பளக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு ஆவன செய்து உதவிய ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் திரு. டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும், அவரது கட்சி அங்கத்தவர்களுக்கும் மற்றும் சகல விதத்திலும் எமது கொடுப்பனவுகளைப் பெற்றுத்தருவதற்கு உதவி புரிந்த கனம். யாழ் அரச அதிபர் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுவதோடு அவர்களது பணிகள் மேன்மேலும் வளர வாழ்த்துகின்றோம்.

நிர்வாகத்தினரும், பணியாளர்களும்,
லங்கா சோல்ட் லிமி. (வ. பி)
இல 6, கச்சேரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(சி/2643)

# கண்ணீர் அஞ்சலி

எமது சகமாணவி
செல்வி சு. சாந்தி
செல்வி சு. நந்தினி (விஞ்ஞான பட்டதாரி)
ஆகியோரின் அன்புத் தாயாரான
திருமதி
தெய்வானைப்பிள்ளை சுந்தரலிங்கம்

அவர்கள் 04-01-98 அன்று இயற்கை எய்தினார். அவரது மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

3 ஆம் (B) வருட
விஞ்ஞானபீட மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

(52658)

# கண்ணீர் அஞ்சலி

கு. மாணிக்கம்

நல்லூர் சங்கிலியன் வீதியில் வசிக்கும்
எமது சமாச உறுப்பினர்
திரு. மா. சம்புலிங்கத்தின்

தந்தையாரான கு. மாணிக்கம் அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகிறோம். அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்திருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகம்,
சமூக முன்னேற்றக் கழகங்களின் சாமசம்.
185, கண்டி வீதி, அரியாலை. (52660)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 16-01-98 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org